www.Padasalai.Net

01.04.2024 முதல் ஆறு
மாதங்களுக்கு சம்பளம்
வழங்கும் அதிகாரம்
(Pay authorization for the month of April
2024 to September 2024)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**<u>கடித எண். 3427/ப.க.4(2)/2024   நாள் 29.04.2024</u>**

அனுப்புநர்
திரு ஜெ.குமரகுருபரன். இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

30/04/2024

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை–01/08/35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

இ3.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலகங்களில் தோற்றுவிக்கப்பட்ட தற்காலிக பணியிடங்கள் – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடத்திற்கு 01.04.2024 முதல் ஆறு மாதங்களுக்கு தொடர் நீட்டிப்பு – ஆணை வேண்டுதல்– தொடர்பாக.

பார்வை

1. அரசாணை (1டி) எண்.253, பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை, நாள் 12.04.2018.
2. அரசாணை (1டி) எண்.53, பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை, நாள் 19.03.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001511/ எல்/இ3/2021, நாள் 13.03.2024.

********

அரசாணை (1டி) எண்.253, பள்ளிக் கல்வி (ப.க.4(2)த் துறை, நாள் 12.04.2018–ல், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கு தற்காலிகமாக ஒப்பளிக்கபட்ட 478 ஆசிரியரல்லாதோர் மற்றும் அலுவலர்கள் பணியிடங்கள் 01.01.2018 முதல் 31.12.2020 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. அரசாணை (1டி) எண்.53, பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை, நாள் 19.03.2021–ல், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கு தற்காலிகமாக ஒப்பளிக்கப்ட்ட 478 ஆசிரியரல்லாதோர் மற்றும் அலுவலர்கள் பணியிடங்கள் 01.01.2021

www.Padasalai.Net

முதல் 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001511/எல்/இ/2021, நாள் 13.03.2024-ல், மேற்காணும் பணியிடங்களுக்கு 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதியக் கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டுள்ளது.

4. பள்ளிக் கல்வி இயக்குநர் தற்போது, மேற்கண்ட 478 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், அரசாணை பெற காலதாமதம் ஆகும் என்பதால் 01.04.2024 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காணும் சூழ்நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மேற்குறிப்பிட்ட 478 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத தற்காலிக பணியிடங்களுக்கு 01.04.2024 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (**Pay Authorization**) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.04.2024 முதல் 30.09.2024 வரை ஆறு மாதங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. இக்கடிதம் இத்துறையின் மின்கோப்பு எண். 3427/பக4(2)/2024, நாள் 29.04.2024-ன்படி நிதித் துறையில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

29.04.2024
(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக.

29/04/24

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35
நிதி (கல்வி-II)த் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

www.Padasalai.Net

நகல்:-

அரசு கடித எண்: 3427/ப.க.4(2)2024 நாள்: 29.04.2024ம்

இயக்குநரின் ந.க. எண்: 001511/எல்/இ3/2021 நாள்: 30.4.2024

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர்

பெறுநர்:

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.